
# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

22-5-66

விலை 20 காசு



டி வெலரா

# பாண்டியன் திருமேனி




சேரநாட்டின் தலைநகரான வஞ்சிமா நகரின் கிழக்கே ஒரு கல் தூரத்தில், **புத்தபுரம்** என்ற சிற்றூர் இருந்தது. தெற்கே குன்றுகளாலும், மற்றத் திசைகளில காடுகளாலும் சூழப்பட்ட அந்தச் சிற்றூரில், பெரிய புத்தவிகாரம் ஒன்றும், சேர மன்னனுக்குச் சொந்தமான பளிங்கு மாளிகை ஒன்றும் இருந்தன.

தமிழ் நிலத்தின் பல பகுதிகளிலுமிருந்து வந்திருந்த பௌத்தர்களும், பௌத்தத் துறவிகளும் அன்று பிற்பகல் அந்தப் புத்த விகாரத்தில் குழுமியிருந்தனர்.

மஞ்சள் ஆடை அணிந்திருந்த துறவிகளுக்கு மத்தியில் பட்டாடையும் பொன் அணிகளும் அணிந்து, தலையில் மணிமுடி ஒளி செய்ய, இலங்கை அரசன் பராக்கிரமபாகு உட்கார்ந்திருந்தான்.

தமிழ் நிலத்தில் அவசரமாகப் பௌத்த மதத்தைப் பரப்பவேண்டிய அவசியத்தைப்பற்றியும், அப்படிப் பரப்புவதற்கான வழிமுறைகளைப்பற்றியும், தங்களது கருத்தைப் பல துறவிகள் வெளியிட்டனர். அந்த நற்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் தர, இலங்கையிலிருந்து வந்திருக்கும் பராக்கிரமபாகுவிற்கு அவர்கள் பாராட்டும் நன்றியும் நல்கினர்.

அவற்றைக் கேட்டுக்கொண்டு இலங்கை அரசன் புன்னகையோடு அமர்ந்திருந்தான். அவனுக்கு இருந்த ஆசையெல்லாம் எப்படியும் குலசேகரபாண்டியனை எதிர்க்க, பௌத்தத் துறவிகளின் சம்மதம் கிடைத்துவிட்டால் போதும் என்பதே.

"பாண்டிய மன்னன் குலசேகரனின் மண்ணாசையால், செத்துக்கொண்டுவந்த சைவம் பழையபடி பல்லக்கில் வலம்வர ஆரம்பித்துவிட்டது! என் வணக்கத்திற்குரிய பிக்குகளே, பிக்குணிகளே! என் அன்பிற்குரிய பௌத்தர்களே! சேரநாடும் பௌத்தர்களின் சோலையாகிவிட்டது - வட தென் பாண்டிய நாடுகளும் நம் பாசறையாக மாறிக்கொண்டு வருகின்றன—என்றெல்லாம் எண்ணி நான் பூரித்தேன்! இந்த நாடுகளில் இன்னும் பிரசாரத்தை அதிகமாக்கி அவற்றைப் பலமான பௌத்தக் கோட்டைகளாக்கிக் கொண்டு, தமிழர் நெறிக்கு மாறுபட்ட சைவ வைணவ மதங்களை முழுமூச்சோடு எதிர்த்து

## 2—1.

## புத்தர் திருவாக்கு

(15-ம் பக்கம் பார்க்க)

**உண்மை! உண்மை!!**

**உண்மைகள் எல்லாவற்றையும் நீங்கள் சொல்லவேண்டும் என்பதில்லை; நீங்கள் சொல்லுபவைகள் எல்லாம் உண்மையாக இருக்கட்டும்!**

**—ஹொரேஸ்மான்.**


# காஞ்சி

மலர் 2 22-5-66 இதழ் 43


# அறிவாளர் கடமை

நாட்டின் அறிவாளர்களும், நல்லறிவு தந்திடும் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள இதழாசிரியர்களும், அவ்வப்போது எழும் பிரச்சினைகள் குறித்தும், இயற்றப்படும் சட்டங்கள்பற்றியும், விதிக்கப்படும் வரிகளைப்பற்றியும் தமது கருத்தினை அளித்திடுகின்றனர்.

அதன் காரணமாகப் பல பிரச்சினைகள்பற்றி பொதுமக்கள் விளக்கமும் தெளிவும் பெறுகின்றனர்; தமது நிலையைச் செம்மைப்படுத்திக்கொள்கின்றனர்.

அறிவாளர்கள்—அவர்களில் இதழாசிரியர்களாக உள்ளவர்கள் செய்துவரும் இந்தப்பணி அவர்களின் கடமை உணர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. நாட்டினரின் நன்றியறிதலைப் பெற முழுத் தகுதி பெறுகின்றனர்.

ஆனால் அவர்களின் கடமை அவ்வப்போது எழும் பிரச்சினைகள்பற்றி விளக்கம் அளிப்பதோடு முடிந்துவிடக்கூடாது. அவர்களிடம் நாட்டவர் மேலும் அதிகமாக எதிர்பார்க்கின்றனர்.

நூற்றுக்கு அறுபதுபேருக்குமேல் எழுத்தறிவற்றவர்களாக உள்ள நாட்டில், ஜனநாயகம் செம்மையாகவும் பயன்தரத்தக்க விதத்திலும் நடைபெற வேண்டுமென்றால், அறிவாளர்கள் மேலும் அதிக அளவிலும், தொடர்ச்சியாகவும், அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தத்தக்க முறையிலும், அரசியல் துறையிலே ஈடுபாடுகொண்டிடவேண்டும்.

நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தந்த கட்சி என்ற விருது பெற்றுள்ள காங்கிரசினால் இன்று தீர்க்கப்பட முடியாதனவாகிவிட்ட சிக்கல் நிறைந்த புதுப்புது பிரச்சினைகள் முளைத்தபடி உள்ளன.

இந்தப் பிரச்சினை பலவற்றிலே காங்கிரசிலேயே, முரண்பட்ட கருத்துக்கொண்டவர்கள் உள்ளனர்.

அம்பர் சர்க்காவிலிருந்து அமெரிக்க உதவி பெறுவதுவரையில், மதுவிலக்குச்சட்டத்திலிருந்துமராட்டிய—மைசூர் தகராறு வரையில், மாறுபட்ட கருத்துக்களைக்கொண்டவர்கள், ஒரே முகாமில் இன்று இருந்துவருன்கிறனர்; மோதிக்கொள்ளவும் செய்கின்றனர்.

மதுவிலக்குச் சட்டத்தை எடுத்துவிடவேண்டும் என்று பேசும் காங்கிரசாரும் இருக்கின்றனர்; மகாத்மாவின் நினைவுக்கு மாசு ஏற்படுத்தும் மாபாதகம் செய்யாதீர், மதுவிலக்குச் சட்டத்தை எடுத்துவிடாதீர் ஏழைகளின் நெஞ்சிலே நெருப்பைக் கொட்டாதீர் என்று உருக்கத்துடன் பேசும் காங்கிரசாரும் உள்ளனர்; ஒரே முகாமில்.

மானம் பெரிது, மடிந்திடக்கூடச் சம்மதிக்கலாம் மடிபிச்சை எடுக்கக்கூடாது என்று கூறிடும் துணிவாளர்களும்,

மக்களைச் சாகவிடுவது ஒரு நல்லாட்சி நினைத்துக்கூடப் பார்க்க முடியாதது, எப்படியாவது எங்கிருந்தாவது உணவுப்பொருள் தருவித்தாகவேண்டும் என்று பேசிடும் காரியவாதிகளும், ஒரே காங்கிரஸ் முகாமில் உள்ளனர்.

அமைச்சர்களேகூட ஆளுக்கு ஒரு கருத்தும், வேளைக்கு ஒரு கருத்தும் 'சொந்த முறையில்' வெளியிட்டுக்கொண்டிருக்கின்றனர்.

தங்கக் கட்டுப்பாடு சட்டத்தை உடனடியாக எடுத்துவிட வேண்டும் என்று வலியுறுத்தவும் காங்கிரசார் உள்ளனர்.

கூடவே கூடாது! தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின் மூலந்தான் தங்கக் கள்ளக் கடத்தலை ஒழிக்க முடியும் என்று வாதாடவும் காங்கிரசார் உள்ளனர்.

அணுகுண்டு தயாரித்தாகவேண்டும்; அப்போது தான் சீனாவைச் சமாளிக்க முடியும் என்று வலியுறுத்தவும் காங்கிரசார் உள்ளனர்.

காந்திய முறைக்கே அது கேடு செய்வதாகும்; அணுசக்தியை ஆக்க வேலைக்குத்தான் பயன்படுத்த வேண்டும் அழிவு வேலைக்கு அல்ல என்று போதனை செய்திடவும் காங்கிரசார் உள்ளனர்.

தனியார் துறையின் கொட்டம் அடக்கப்பட வேண்டும் என்று வீரம் பேசிடவும் காங்கிரசார் உள்ளனர்.

தனியார்துறை மூலம் தொழில் வளரவேண்டும், இதனைத் தடுப்பது தீது என்று 'புத்தி' கூறிடவும் காங்கிரசார் உள்ளனர்.

இதுபோல, பல அடிப்படைப் பிரச்சினைகளிலே ஒத்த கருத்தினைக் கொள்ள முடியாதவர்கள், ஒரே முகாமில் இருந்து வருவது, அந்த முகாமில் கிடைத்திடும் ஆதாயத்தை இழந்திட மனமின்றியும், தமக்கென்று அமையும் கருத்துக்கு ஆதரவு திரட்டிடும் ஆற்றல் தமக்குப் போதுமான அளவு உண்டா என்பதிலே சந்தேகம் ஏற்பட்டு விடுவதாலுமே யாகும்.

ஆகவே அங்கு ஒரு 'போலிக் கூட்டுறவு'—ஒப்புக்கு ஒன்றுபட்ட தன்மைதான் இன்று இருந்துவருகிறது. அது அந்தக் கட்சிக்கு வலிவு அளித்திடாது என்பது மட்டுமல்ல, நாட்டிலே ஏற்பட்டுவிடும் சட்டதிட்டங்கள், முறைகள், ஏற்பாடுகள், ஆகியவைகள், எப்படிப்பட்ட 'ஆதரவு' பெற்றிருக்கிறது என்பதை உணரும்போது, ஜனநாயகம் எத்தனைக் கேலிக்கூத்தாக்கப்படுகிறது என்பதும் விளக்கமாகிறது.

அறிவாளர்கள் இந்த நிலைமையைத்தான் மிகவும் குறிப்பாகக் கவனிக்கவேண்டும்,

காங்கிரஸ் கட்சியே நூற்றுக்கு ஐம்பது என்ற அளவுகூட வாக்காளர் ஆதரவு பெற்று ஆட்சி செய்யவில்லை.

மற்ற எந்தக் கட்சிக்குக் கிடைத்த வாக்குகளைக் காட்டிலும் காங்கிரஸ் கட்சிக்கு அதிக அளவு வாக்குகள் கிடைத்தன என்றுதான் கணக்குக் காட்டுகிறது; நாட்டு மக்களில் பெரும்பாலோரின் ஆதரவு பெற்றுக் காங்கிரஸ் ஆட்சி அமைந்திருக்கிறது என்ற கணக்கினை அல்ல.

இந்த நிலையே ஜனநாயகத்தின் வலிவினையும் பொலிவினையும் மங்கிடச் செய்கிறது.

நூற்றுக்கு நாற்பத்தைந்து என்ற அளவு வாக்கு பெற்றதே, காங்கிரசாட்சி 'மைனாரிட்டி' கருத்தினைத்தான் ஆதரவாகப் பெற்றிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இதிலும், அந்தக் கட்சியிலே நாம் விளக்கியுள்ளபடி பல அடிப்படைப் பிரச்சினைகளில், மாறுபட்ட கருத்துள்ளவர்கள் ஒரு போலிக் கூட்டுறவு வாழ்க்கை நடத்திவருகின்றனர். இதனைக் கணக்கிலெடுத்துக்கொண்டு பார்க்கும்போது, இன்று ஆளுங் கட்சி புகுத்தும் பல ஏற்பாடுகளுக்கு நாட்டு மக்களில் நூற்றுக்கு இருபது அல்லது முப்பது பேர்களுடைய ஒப்புதல் மட்டுமே இருக்கிறது என்பது புரியும்.

இந்நிலையில், ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்படுகிறது.

இந்த நிலைமையைத் திருத்தி அமைத்திடும் கடமையை அறிவாளர் மறந்திடின், ஜனநாயகத்துக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலம் இருந்திட முடியாது.

விடுதலை பெற்ற கட்சி என்ற விருது—இருக்கும் கட்சிகளில் வாய்ப்பு அதிகம் பெற்றுள்ள கட்சி என்ற மயக்கம்—இவைகளிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள மக்கள் முன்வந்துவிட்டனர்.

இனி மக்களுக்கு நல்வழி காட்டிடவும், ஜனநாயகத்தைச் செம்மைப்படுத்திடவும், அறிவாளர் முன்வருதல் வேண்டும்.

இந்தியாவின் பிரதம நீதிபதியாக இருந்த **கஜேந்திரகட்கர்** பலமுறை, அறிவாளர்கள் பொதுப் பிரச்சினைகளிலே அதிக அளவு அக்கறை காட்டவேண்டும் என்று வலியுறுத்தியதையும் இங்கு நினைவு படுத்துகிறோம்.

பொதுத்தேர்தல் நெருங்கி வந்துகொண்டிருக்கும் நேரம் இது.

ஜனநாயகத்தைப் பயனுள்ளதாக்கிடவும், செம்மைப் படுத்திடவும் தாம் தமது கடமையினைச் செய்தாக வேண்டும் என்ற உணர்வுடன் அறிவாளர் எழுச்சி பெற்று முன்வரவேண்டும்.

அறிவாளர் என்றால் ஆக்ஸ்போர்டு—கேம்பிரிட்ஜ் சென்றுவந்தவர்கள், எம். ஏ., பி. ஏ. பட்டம் பெற்றவர்கள் என்று மட்டுமே நாம் கூறவுமில்லை, கொள்ளவுமில்லை.

நல்லது கெட்டது புரிந்தவர்கள், உள்ளத்தில் பட்டதைக் கூறிட முனைபவர்கள், அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டு அக்ரமத்துக்கு துணைபோகாதிருப்பவர்கள், எழுத்தறிவற்றவர்களால், இவர்கள் உலகம் தெரிந்தவர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள் அனைவரையுமே கூறுகிறோம். ●

முகப்பில்

# டி வெலரா

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அயர்லாந்தின் தலைநகரான **டப்ளினி**லிருந்து ஒரு சுவையான தகவல் வெளிவந்தது. அந்த நாட்டின் அதிபர் **டிவெலரா** 5,38,058 வாக்குகள் பெற்று தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றார்; அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜெனரல் **மக்காய்ன்** 4,17,482 வாக்குகளே பெற்றார்.

--இப்படிப்பட்ட வெற்றியை அடைந்த டிவெலராவின் "விகிதாசார தேர்தல்முறை ஒழிப்பு" என்ற கொள்கை மட்டும் 4,53,319 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தது. இக்கொள்கைக்கு எதிராக அளித்தவாக்குகளின் எண்ணிக்கை 4,86,989.

மனிதர்கள் முக்கியம், ஆனால் அதைவிட அவர்கள் கடைபிடிக்கும் கொள்கைகள் முக்கியம் என்ற முதிர்ந்த ஜன நாயகப் பண்பு அந்த நாட்டில் நிலவுகிறது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

இந்த இதழின் முகப்பை அலங்கரிக்கும் **டிவெலரா** ஜூன் திங்கள் முதல் நாளன்று நடைபெற இருக்கும் அயர்லாந்தின் அதிபர் தேர்தலுக்கு மீண்டும் போட்டியிடுகிறார்.

84-வது வயதினைக் கடந்துகொண்டிருக்கும் இந்த அயர்லாந்தின் தலைவருக்கு 50-ஆண்டுகளுக்கு மேற்பட்ட முதிர்ந்த அரசியல் அனுபவம் உண்டு.

அயர்லாந்தின் அரசியல் முறைப்படி ஒருவர் இருமுறைகளே தலைவர் தேர்தலுக்குப் போட்டியிடலாம். எனவே இதுவே டிவெலராவுக்குக் கடைசித்தடவையுமாகும்.

அரசியல் பாரம்பரியமும் செல்வாக்கும் மிக்க குடும்பத்துப் பிள்ளையான **தாமஸ்ஹிக்கின்ஸ்** என்பார் இவரை எதிர்த்து வலிமையுடன் போட்டியிடுகிறார். 1960-ம் ஆண்டு அமெரிக்காவில் கென்னடி கடைப்பிடித்த பாணியை அவர் தேர்தல் பிரசாரங்களில் கடைப்பிடிக்கிறாராம்.

ஆனால், டிவெலராவோ அதிக பரபரப்போ மிகக் கடினமான உழைப்போ இல்லாமல் அமைதியான முறையில் ஆதரவு தேடி வருகிறாராம். பழம் பெரும் அனுபவவாதி என்றும், தற்கால அயர்லாந்தை உருவாக்கிய தலைவர் என்றும் அவர் ஆதரவாளர்களால் அறிமுகப்படுத்தப்படுகிறார்.

40 ஆண்டுகளுக்கு முன்னால் தன்னால் நிறுவப்பட்டு இத்தனைக் காலமும் கட்டிக்காத்துவந்த சொந்தக்கட்சியினரின் ஏகோபித்த ஒப்புதல், ஒப்புவமை இல்லாத உழைப்பு ஆகிய இரண்டின் முழுபலத்தோடு தேர்தலை நோக்கியிருக்கும் உலகின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான **டி வெலரா**, இன்னும் சில நாட்களில் செய்தி உலகில் பரிமளிக்க இருக்கிறார்.

**—அரசியல் மாணவன்.**

# தம்பி

# கருத்தோவியம்

சில இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்; வருகிறாயா? என்ன கேள்வி கேட்கிறேன் பார் ஏமாளித்தனமாக. நான் அழைக்கும்போதெல்லாம், அழைக்கும் இடங்களுக்கெல்லாம் வரத்தவறாத உன்னைப்பார்த்துக் கேட்கிறேனே, வருகிறாயா? என்று. நீ வருகிறாய் என்ற தெம்புதானே என்னையே இயக்கிவைக்கிறது. ஆகவே வருகிறாயா? என்று கேட்டது, கேள்வி வடிவிலே இருக்கிறதே தவிர, ஐயப்பாட்டின் விளைவாக எழுந்துள்ள வினா அல்ல; வா! தம்பி! சில :இடங்களைச் சென்று கண்டுவிட்டு வரலாம்.


**தங்கமான குணம்! எல்லோராலும் மதிக்கப்படுபவர்! வாணிபத் திறமை கண்டு ஊரே வியந்து பாராட்டுகிறது! ஊர் மக்களின் நலனுக்காக உழைப்பதிலே தனி ஆர்வம்! அவருடைய குணத்துக்கு ஏற்ற பத்தினி! பிள்ளைகள் அவர் கீறிடும் கோட்டைத் தாண்டமாட்டார்கள், அவ்வளவு அடக்கம், கட்டுப்பாடு, ஒழுக்கம். எந்தக்காரியத்திலே ஈடுபட்டாலும் வெற்றிதான்! வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறவர்! ஆனால், பாவம் அவருக்குத் தீராத காசநோய்!!**

O

தம்பி! பேசினாரே, அவரைப் பார்த்தாயா, 'பெரியபுள்ளி'; மற்றோர் பெரிய புள்ளியைப்பற்றிப் பரிவுடன் பேசுகிறார். பரிவுக்குக் காரணம் என்ன என்று கேட்கிறாய். ஏன், சாதாரண மனிதாபிமானம்! ஒப்புக்கொள்ளமாட்டாயா.........சாதாரணமானவர்களுக்குத்தானே மனிதாபிமானம் இருக்கும்; இவர் 'பெரியபுள்ளி'யாயிற்றே இவருக்கு வேறு ஏதாவது பெரிய 'அபிமானம்' இருக்கவேண்டுமே என்கிறாய்; சரி உன்னிடம் உண்மையை மறைப்பானேன். காசநோய் வந்திருப்பதாகச் சொல்லுகிறாரே, அவர் காசுக்கடை **கனகசபை** அந்த வட்டாரத்திலேயே மிகப் பெரிய புள்ளி. அவரிடம் பெரிய 'தொகை, கடன் வாங்கி இருப்பவர் இந்தப் 'பெரியபுள்ளி' **அரியநாயகம்.**

கடன் பட்டிருக்கும் ஆசாமிக்குக் கசப்பு அல்லவா இருக்கும்; பரிவுடன் பேசுகிறாரே; காரணம் என்ன என்று கேட்கிறாய். விடமாட்டாயே நீ, முழு உண்மையைச் சொன்னாலொழிய.

கடனைத் திருப்பித் தரச்சொல்லி கனகசபை வற்புறுத்தியதாலே, அருமை நாயகத்துக்குக் கசப்புதான். ஆனால் அதை மறைத்துக்கொண்டுதான் பேசுகிறார், பரிவுகொண்டவர்போல. ஏன் என்றால், அவர் யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாரோ, அவர் 'கனகசபை'யின் 'கையாள்'. ஊரிலே யாரார் தன்னைப்பற்றி என்னென்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து வந்து சொல்லுவதற்காகவே 'வேலை'யில் வைக்கப்பட்டிருக்கும், **வையாண்டி!** கடன் பட்டிருக்கும் அருமைநாயகம், கனகசபையைப்பற்றிப் பரிவு காட்டி, தங்கமான குணம் என்று பாராட்டிப் பேசுவது, இதனை வையாண்டி, கனகசபையின் காதிலே போட்டுவைப்பான், அது கேட்டு மகிழ்ந்து கனகசபை கடனைத் திருப்பிக் கொடுத்தாக



வேண்டும் என்று 'ஒட்டி' போடுவதை விட்டுவிடுவான் என்பதற்காக. பரிவுக்குக் காரணம் அதுதான்.

*

**காசநோயா? அடே அப்பா, என்னமோ ஏதோ என்று எண்ணிக்கொண்டேன், தக்க மருத்துவம் பாரத்தால் பஞ்சு பஞ்சாகப் பறந்து போகாதா அந்தக் காசம். இந்த ஊரிலேயே அதற்குத் தகுந்த டாக்டா இல்லே என்ருல்தான் என்னவாம்! சீமைக்குப் போகிருர்! அமெரிக்காபோகிருர்! சுவிட்சர்லாந்து காற்று பட்டாலே போதுமாமே, காசம் போய்விடுமாம். அவருக்கு என்ன, வசதிக்குக் குறைவா! இருப்பதிலே பதினுயிரத்திலே ஒருபங்கு வீசி எறிந்தால், வீட்டைத் தேடி ஓடிவருகிருர்கள் உலகப் புகழ்பெற்ற டாக்டர்கள், காசம் அவருக்கு என்று பெருமூச்செறிய வேண்டுமா!!**

இவர் யார் தெரிகிறதா தம்பி! காசநோயைப் பற்றி இவ்வளவு அலட்சியமாகப் பேசுகிருரே, இவர் கலியாணத் தரகர் **கதிரேசன்**—கமிஷன் ஏஜண்டு கதிரேசன் என்று சொல்லிக்கொள்வார். இவர், யாரிடம் பேசுகிருர், தெரியுமா? கனகசபைக்கு மூன்ரும் தாரமாகத் தன் இளம் பெண்ணைக் கொடுத்துவிட்டு, இப்போது கலக்கமடைந்திருக்கும் **குட்டியப்பரிடம்**! பாவி! பணத்துக்கு ஆசைப்பட்டு, பெண்ணைக் கொண்டு போய் காசநோய் பிடித்தவனுக்குக் கொடுத்தாயே, இது அடுக்குமா என்று நாலுபேர் கேட்கிருர்கள். அதனுல் ஆத்திரமடைந்து அவர் கதிரேசனிடம் கேட்கிருர் இப்படிப்பட்ட இடம் பார்த்துக் கொடுத்தாயே, என் குடும்பத்தைக் கெடுத்தாயே என்று. அதற்குச் சமாதானம் கூற, ஆறுதல் அளிக்க தரகன் தந்திரமாகப் பேசுகிருன், சீமைக்குப் போயாவது காசத்தைப் போக்கிக்கொள்வார், சீமான்! ஏன் கவலைப்படுகிருய், காசம் அவரை என்ன செய்யும் என்று அடித்துக் கேட்கிருன்.

*

**காசமாமே! ஏழையும் இல்லாதவனும், உடல் வலிவுக்குத் தேவையான உணவு கிடைக்காமல், மாடாக உழைத்து ஒட்டி உலர்ந்துபோய். இந்தவிதமான வியாதிக்கு ஆளாவது உண்டு. இவருக்கு என்ன குறை! வேலிகள் ஆயிரம்! கூப்பிட்ட குரலுக்கு ஓடோடிவர ஆள் அம்பு, மாளிகை! நாலு சமயற்காரர்கள்! வேளை தவருமல் பால் பழம். ஒரு குறையும் கிடையாதே, வயலுக்குத் தண்ணீர் இறைக்க வேண்டுமா, வண்டியில் மாட்டைப் பூட்டி ஓட்ட வேண்டுமா, வயலிலே இறங்கி உழவேண்டுமா, உடலை வாட்டத்தக்க எந்த வேலையாவது உண்டா! கொடுத்து வைத்தவர்! கோலாகல வாழ்வு! அவருக்கு ஏன் வந்தது காசம்? எப்படி வந்தது அந்த நோய்? உடம்பு ஒரு மாதிரியாக இருப்பது தெரிந்தாலே போதுமே, பத்து வைத்தியர்கள் பக்கத்திலே வந்து நிற்பார்களே! மூன்று வேளை பஸ்பம் என்பான் ஒருவன்! ஒரு முழுங்கு கஷாயம் என்பான் இன்னொருவன்? சுச்சக்காய் அளவு லேகியம் என்பான் இன்னொருவன்! ஒரே ஒரு ஊசி! அடுத்த நாள் காசம் இருந்தால் என் பெயரையே மாற்றிக்கொள்கிறேன் என்பான் இன்னொருவன்! இப்படிப்பட்ட சுகபோகம் அவருக்கு. அவரை வந்து தொட இந்தக் காசத்துக்கு அத்தனைத் துணிச்சலா!**

இவர் யார் கூறட்டுமா? புதிதாகப் பணம் சேர்த்துக்கொண்டிருக்கும் **புன்னைவனம்**. கனகசபை போன்ற பெரிய புள்ளிகளின் நேசத் தொடர்பு மூலம் ஆதாயம் தேடிக்கொள்ளும் போக்கினன். பணம் ஒருவருக்குச் சேருவதே அவன் செய்த புண்ணியத்தினுல் என்பதிலும், பணத்தைச் செலவிட்டால் எந்தவிதமான கஷ்டத்தையும் போக்கிவிட முடியும் என்பதிலேயும் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன். கனகசபையுடைய கடைச் சரக்குகளை மொத்த விலேக்கு வாங்கிச் கடைகளுக்கு விற்பனை செய்திடும் ஏற்பாட்டுக்காகத் திட்டமிட்டுக் கொண்டிருப்பவன். அதற்குத் தன்னேடு 'பங்கு' சேர விருப்பம் தெரிவித்து, பிறகு 'ஒரு விதமாக'ப் பேசத் தொடங்கிப் பரசுராமனிடம் பேசுகிருன். கனகசபைக்குக் காசமே வராது! வந்திருப்பது காசமாக இருக்கமுடியாது! என்று கூறுகிருன், பரசுராமனுக்குத் தைரியமூட்ட.

*

**அபிஷேகம் செய்தார், ஆராதனை நடத்தினுர், ஆலயம் கட்டினுர், திருவிழா நடத்தினுர், புண்யவான், தர்மவான், பக்திமான் என்று ஊரே கொண்டாடுகிறது. அவருடைய தெய்வ பக்திதான் அவருக்கு வேலிகள் ஆயிரம் தந்தது, போதும் என்கிற அளவு செல்வம் கொடுத்தது, நிம்மதியான வாழ்க்கையைக் கொடுத்தது என்றெல்லாம் பெருமைப்பட்டுக் கொண்டார்களே; தெரியுமா விஷயம்? ஆசாமிக்குக் காசம்!! ஆமய்யா, ஆம்! காசம்!! உலுக்கி உலுக்கி எடுக்கிறது! உடலை உருக்கியே விடுகிறது. பொல்லாத வியாதி இந்தக் காசம்; அது இவருக்கு!!**

கொதிப்புடன் பேசுகிருனே ஏன் என்று யோசிக்கிருயா, தம்பி! **கோதண்டன்**, நல்லவன்; வாழ்ந்து கெட்டவன். அயன் நஞ்சை ஒரே சதுரம் அறுபது ஏகர்! யானை கட்டிப் போர் அடிப்பது என்று பாடுகிருர்களே, இப்படிப்பட்ட வயல் பற்றித்தான். அந்தச் சதுரத்தை அநியாயமாக விலேயைக் குறைத்து, வேறு ஒருவனும் 'ஏலம்' கேட்க வராமல் தடுத்து, தட்டிப் பறித்துக்கொண்டான் கனகசபை. கொதிப்பு ஏற்படாமலா இருக்கும் கோதண்டனுக்கு. தன் நிலத்தை அநியாயமாகக் கனகசபை அபகரித்துக் கொண்டது பற்றியும், திருட்டுக் கணக்கு எழுதியது பற்றியும் ஊரிலே பெரியவர்களிடம் கோதண்டன் முறையிட்டபோது, அவர் அப்படிச் செய்யக்கூடியவரே அல்ல! பக்திமான்! தர்மிஷ்டர்! என்றெல்லாம் கூறினுர்கள். தனக்காக, நியாயத்துக்காகப் பரிந்து பேச ஒருவரும் வரவில்லேயே என்ற எரிச்சல். இப்போது, கனகசபைக்குக் காசம் என்று கேள்விப்பட்டதும், அடக்கிவைக்கப் பட்டிருந்த ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்புகிறது. கனகசபையின் அக்ரமத்தைக் கண்டிக்கத் துணிவற்றுக் கிடந்தவர்களை இடித்துக் கேட்கத் துடிக்கிருன். பெரியவர்கள் இவனை இவ்விதம் பேசவிடுவார்களா! அதனுல்தான், பெரியவர்கள் காதிலே விழட்டும் என்று, பெரியவர்கள் பலர் நடத்தும் பண்டரி பஜனைக் கூடத்து மானேஜர் **மார்க்கபந்துவிடம்**, பேசுகிருன், ஆத்திரம் தீர.

*

காசம்தானே? குஷ்டம், குன்மம், குடல் புண், இப்படி ஏதும் இல்லேயா! காசம்தானு வந்தது, எத்தனையோ பேர்களுடைய வாழ்வை வாட்டி வதைத்த அந்த உத்தமருக்கு! காசமாம்! அது என்ன துடிதுடிக்கச் செய்யுமா, பதை பதைக்க வைக்குமா! ஒரு குற்றமும் செய்யாதவனைப் பிடித்துக்கொள்கிறது தொழுநோய்—இவருக்குக் காசம்!! காசநோய் வந்தால் என்ன? பட்டென்று

கடன் கொடுத்தவனிடம் போய், காசம்—குன்மம்—காச்சல் என்று எதைச்சொல்லி என்ன பயன்? அதிலும் வேடிக்கை என்னவென்றால் தம்பி! கடன் பட்டவனுக்கு நோயும் கண்டுவிட்டது என்றால், கடன் கொடுத்தவன் மேலும் கண்டிப்புக் காட்டுவான்! சீக்கிரமாகக் கடனை வசூலித்துவிடவேண்டும். ஆசாமி போய்விட்டா! கொடுத்த பணமல்லவா கோவிந்தா ஆகிவிடும்! ஆகவே இப்போதே பணத்தை வசூலித்தாகவேண்டும்.

அந்தப் பரபரப்புடன் வட்டிக்கடைக்காரன் பேசுகிறான். கடனிலே ஒருபகுதியாவது திருப்பிக்கொடுத்துவிட்டால், பிறகு அவனே கூட, பரிவுகாட்டுவான் பேச்சில், பயம்வேண்டாம் காசநோய்க்காக என்பான், மருந்துபற்றிய விவரம் கூடச் சொல்லுவான். இப்போது அவனுக்கு வேண்டியது பணம்! அந்தநோயாளி பிணமாவதற்குள்!!

தம்பி! எதிரேதானே மண்டிக்கடை; அந்த முதலாளி கைகொடுக்கமாட்டாரா; அவருக்கு இவ்வளவு ஆண்டுகளாக வேலைபார்த்தவனிடம் சிறிதளவாவது பரிவு இருக்கத்தானே செய்யும். மாடாக உழைத்தவனல்லவா, முதலாளியின் குரல்கூடக் கேட்கிறது, வா, வா, போய்க் கேட்போம்.

✽

காசமாமா! சொல்கிறாரா? சொல்லுவாரே, ஆசாமி என்ன சாதாரண மானவரா! எல்லாவிதமான வேஷமும் போடுவாரே! காசம்னு சொன்னா, பச்சாதாபப்பட்டு, விட்டுவிடுவாங்க என்கிற தந்திரம். தெரியுமே எனக்கு, கணக்கிலே திருட்டும் புரட்டும் செய்துவிடுவது, கண்டுபிடித்தது தெரிந்தா, மாட்டிக் கொண்டா உடனே இழுத்துப் போர்த்துக்கொண்டு வீட்டிலே படுத்துக்கொண்டு, எனக்குக் காச வியாதி வந்துவிட்டது என்று சொல்லி கண்ணைக்கசக்கிக் காட்டுவது! இந்த வித்தை எனக்குத் தெரியாதா! மரியாதையா அந்தப் பயலை நாளைக் காலையிலே பணத்தோடு வந்து கணக்கைத் தீர்த்துக்கொண்டு போகச் சொல்லு; இல்லே! காசத்துக்கு மருந்து தருகிற பெரிய ஆஸ்பத்திரி இருக்குதே,—எது? ஜெயில்! ஆமா அங்கேதான் அனுப்பிவைப்பேன், காசம் கீசம்னு சொல்லி ஏய்த்துவிடலாம் என்று எண்ணிக்கொள்ள வேண்டாமென்று சொல்லு. எனக்குத் தெரியும் இவனோட காசம்! போ! போ! இழுத்துக் கொண்டுவா, பயலை!!

கிணறு வெட்ட பூதம் கிளம்பும் கதைபோலிருக்கிறதே என்று பதறுகிறாயா. தம்பி! பதறாதே! கணக்கிலே திருட்டும் புரட்டும் துளியும் கிடையாது. அதைச் செய்திருந்தால் அவன் ஏன் பாவம், நோயாளியாகி இருக்கப் போகிறான். தனக்குக் நோய் வந்துவிட்டதே என்ற கவலையில், கணக்கிலே தவறு செய்துவிட்டிருக்கிறான்; வரவு வைத்து எழுதவேண்டியதைச் சரியாகச் செய்யவில்லை. பணத்திலே அவன் கைவைக்கவில்லை. பணம், பெட்டிக்குள் இருக்கிறது; மறதி; ஆகவே அது கணக்கில் சேரவில்லை.

கணக்கிலே புரட்டுசெய்து பணத்தை மோசம் செய்துவிட்டு, காசம் என்று வேஷம் போட்டுத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறான் என்று முதலாளி அவசர முடிவு செய்கிறான். ஆரோக்கியசாமி, ஏழை; சத்தியத்தை மதிப்பவன். அவன் வீட்டுக்கு மண்டிக் கடை ஆள் போய் என்னென்ன மிரட்டுவானோ, வா, வா, போய்க் கேட்போம்.

✽

காச நோயாமா? யார், பெரிய டாக்டர் சொல்லிவிட்டாரா? பெரிய டாக்டரல்லவா, பெரிய பெயராகத்தான் வைப்பார், நோய்க்கு. வெறும் பீதி கிளப்புகிறார். காச நோயல்லப்பா, காசு நோய்—டாக்டர் காசு பறிக்கச் சொல்லுகிறார் காசநோய் என்று. நாலு வேளை மிளகுக் கஷாயம் சாப்பிடு, ஒரு நோயும் இருக்காது. அலுப்பின் பேரிலே ஒரு ஆயாசம், இது. இதுவா காசநோய்! வீணாக மனதைக் குழப்பிக்கொள்ளாதே. காசநோய் என்றால் இந்நேரம் உன்னை நடமாட விட்டிருக்குமா, பேச விட்டிருக்குமா! அதனுடைய குணமே வேறே! இது காச நோயே அல்ல.

முதலாளி அனுப்பிய ஆள்தான். அவனுக்குத் தெரியும் ஆரோக்கியசாமியின் நாணயம். ஆகவே அவன் விவரம் கேட்கிறான். மறதியால் நேரிட்டுவிட்ட தவறு பற்றி ஆரோக்கியசாமி சொல்லிவிட்டு, மண்டிக்குக் கிளம்புகிறான், முதலாளியின் சந்தேகத்தைத் துடைக்க.

ஆரோக்கியசாமிக்கு ஆறுதல் அளிக்க, தைரியம் கூறுகிறான் அவனைப் போன்ற ஏழை, ஏகாம்பரம்; இது காசநோயே அல்ல என்று.

அந்த ஏழையின் பேச்சு ஒருதெம்பு கொடுக்கிறது ஆரோக்கியசாமிக்கு. பழைய கோட்டை உதறிப் போட்டுக்கொண்டு புறப்படுகிறான். சந்தோஷத்தம் மாள்கூட, தன் கணவனுக்கு உள்ளபடி காசம் இல்லை; வீண் சந்தேகம், பயம், இதனால் கவலை என்றுதான் எண்ணிக் கொள்கிறாள்கள்.

மறதியாக பெட்டிக்குள் வைத்துவிட்ட பணத்தை எடுத்துக் கொடுத்ததும், முதலாளி மகிழ்ந்து போவார், அல்லவா! அந்த எண்ணம் துள்ளுகிறது அவன் மனதில். அதனால்தான் அத்தனை வேகமான நடை.

அய்யோ! என்ன இவனுக்கு, மறதி கூடப்பிறந்த வியாதி! பாதை ஓரத்தில் நடக்காமல், இப்படி......

அய்யோ! அடடா! ஏ! கிழவா! ஏ! ஏ! மோடார்!

அவ்வளவுதான் தம்பி! நாம் செய்யக்கூடியது, அவன் போய்விட்டான். காசம் இனி அவனை ஒன்றும் செய்யாது!

மோடார் ஓட்டி வந்தவர் டாக்டர்! அவரே கூறிவிட்டார், அதிர்ச்சி — இருதயம் வெடித்துவிட்டது என்று. அதே டாக்டர் தம்பி! கனவான் வீட்டு, டாக்டர்.

அங்கிருந்து அவசரமான அழைப்பு. அதனால்தான் மோடாரை வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றார். வழியில் இவன்!

போலீசுக்கு ஏதோ குறிப்பு கொடுக்கிறார். மோடார் கிளம்புகிறது; கனவான் மாளிகைக்கு. அவருக்குக் காசமல்லவா!! போகலாமா மறுபடியும், மாளிகைக்கு? வேண்டாம் என்கிறாயா! ஆமாம் தம்பி! வேதனையாகத்தான் இருக்கும். ஆனால் என்ன செய்வது, நிலைமை அவ்விதம் இருக்கிறது.

உலகின்போக்கு இருக்கும் விதம்பற்றி எண்ணிப் பார்த்திடவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல காசு மிக்கவனுக்குக் காசநோய் வந்திடின் எவரெவர் என்னென்ன விதமாகப் பேசிடுவர் என்பதனை எடுத்துக் காட்டியது.

✽

வேருேர் விந்தை நடைபெற்றிடின் தம்பி! என்ன கருதிடத் தோன்றும்.

வேகமாக மோடாரை ஓட்டிக்கொண்டு சென்று ஏழையைச்சாகடித்தாரே ஒரு டாக்டர், அவர் கிளம்பு கிருர் என்று வைத்துக்கொள். ஆபத்தில்லாமல் மோடார் ஓட்டும் முறைபற்றிய விளக்கமளித்திட! எப்படி இருக்கும்!! கை கொட்டிச் சிரிப்பர்.

காசு படைத்தவர் என்பதால் மூன்ருந்தாரம் தேடிப் பெற்றுக்கொண்ட காசநோய்க்காரர் கனக சபை **'இல்லற இண்பம்'** பற்றிய சொற்பொழிவு நடாத்திடக் கிளம்பிடின் எப்படி இருக்கும்!

அம்மையார்— அதாவது கனகசபையின் இல்லக் கிழத்தியார் — இளமங்கை — **'பதி பக்தி'** மகத்துவம் பற்றிய காலட்சேபம் செய்திடின் மக்கள் என்ன நினைப்பர்?

கைகொட்டிச் சிரிப்பர், கண்டித்திடுவர்; செயலிலே கோணலாக நடந்துகொண்டு சீலம்பற்றிப் பேசவும் வந்துள்ளனரே என்று கேலிபேசுவர். அப்படித்தானே?

இல்லை என்கிறேன், தம்பி! இல்லை என்கிறேன். உயர்ந்த இடத்தில் உள்வார்கள், செல்வம் படைத்தவர்கள், அக்ரமம் பலசெய்துவிட்டு, அவற்றினை மறைத்துவிட்டு, ஏதுமறியாதார்போல நடித்து, ஊருக்கே உபதேசம் செய்திட முன்வந்திடின், ஊர் மக்கள் திகைப்படைவர், ஆனால் கண்டித்துப் பேசிட முன்வரமாட்டார்கள்.

பெரிய இடத்துப் பகை நமக்கேன் என்று இருந்துவிடுவர். அதுவே உலக வாடிக்கையாகிவிட்டது.

செய்த அக்ரமத்தை மறைத்துவிடவும், மக்கள் அதனை மறந்துவிடும்படிச் செய்துவிடவும்கூட முடியும், செல்வவான்களால், ஆனால் சீலர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டு ஊருக்கு உபதேசமும்செய்து கொண்டிருக்கவும் முடியுமா, பெரும்பாலான மக்களுக்கு அச்சஉணர்ச்சி அழுத்தமாக இருக்கத்தான்செய்கிறது என்ருலும், இந்த நிலைமையையும் தாங்கிக் கொள்ளமாட்டார்கள் என்று வாதாட நினைப்பர்— சிலரேனும்.

அப்படிப் பட்டவர்கள் கூடத் தமது கருத்தை மாற்றிக்கொள்வர், முன்னுள் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமிழகத்தில் அரசியல் உபதேசம் அருளிக்கொண்டு வருகிற விந்தையைக் கண்டபிறகு.

முடிகிறதே அவரால்! நாடு தாங்கிக்கொள்ளுகிறதே அவருடைய உபதேசத்தை!!

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்— சுமத்தப்பட்ட என்றே கூறுகிறேன், தம்பி! மெய்ப்பிக்கப்பட்ட என்று கூறவில்லை—பற்றிய பேச்சும் வதந்திகளும் நிரம்பக் கிளம்பின.


தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

**ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்**




**சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.**

**(Recognised by Central Board of Indigenous Madicine Madras)**

பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
73-A, சிங்காரத் தோப்பு, திருச்சி-8.
28. நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A, கன்னமமான்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.

மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலயத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்,** ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

மறைந்த பிரதம மந்திரி லால்பகதூர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அபத்தமானவை, அடிப்படையற்றவை, கவனிக்கத்தகாதவை என்றுகூறி குற்றச்சாட்டுகளைக் கொண்ட புகார் மனுவைத் தூக்கிக் குப்பைத்தொட்டியிலே வீசிவிட்டு, டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் முகத்தைத் துடைத்து, முகமன்கூறி , மாசுமருவற்றவரே! மாநிதியே! மாச்சரியம் காரணமாகத் தங்கள்மீது இல்லாததும் பொல்லாததுமான புகார்களைக் கூறினர், புல்லர்கள்சிலர்—உமது அருமைபெருமை, நேர்மை நாணயம், திறமைதகுதி, அறிவு ஆற்றல் அறியாது; அந்தப் புகார் கடிதத்தைச் சுக்குநூருகக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்துவிட்டேன். ஆகவே ஆற்றல் மிக்கவரே! புகார்பற்றித் துளியும் கவலையற்று பதவியில் வீற்றிருந்து பாரதமாதாவுக்குச் சேவை செய்துகொண்டு வரவேண்டும்! மறுக்கக்கூடாது! பிரதம மந்திரியாம் எனது வேண்டுகோளை மறுக்கக் கூடாது!—என்று கூறினர்?

இல்லை, தம்பி! இல்லை! புகார் மனுவை, இந்தியாவின் பிரதம நீதிபதியிடம் அனுப்பிவைக்க இருக்கிறேன். அவர் பரிசிலனை நடத்தித் தமது கருத்தளிப்பது நல்லது, தேவை, முறை என்று கருதுகிறேன் என்று தெரிவித்தார்.

அவர் தெண்டனிடாதது மட்டும்தான் பாக்கி, அத்தனைப் பணிவுடன் கூறிப் பார்த்தார், புகார் பற்றித் தாங்களே பரிசிலனை செய்யலாமே, அல்லது தாங்கள் அமைக்கும் ஒரு குழுவினர் பரிசீலனை செய்யலாமே, பிரதம நீதிபதியிடம் அனுப்பத் தேவையில்லையே என்று முறையிட்டுக் கொண்டார்.

தாங்களோ எனது சகா! தங்கள்மீது வந்துள்ள புகாரை நான் விசாரிப்பதா! செச்சே! அது முறையாகாதே! அதனல்தான் இந்தியாவின் பிரதம நீதிபதியிடம் அனுப்பிவைக்க எண்ணுகிறேன். அவர் துவக்க வேலையைத்தான் பார்த்திடுவார்; அதாவது இந்தப் புகார்களுக்குத் துளியேனும் ஆதாரம் இருக்கிறதா, விசாரணைக்கு ...டுத்துக்கொள்ளத்தக்கதுதான இந்தப் புகார், அல்லது வெறும் குப்பைதான என்பதுபற்றி பிரதம நீதிபதி ஆராய்வார். அதுதான் முறை. அதுதான் என் முடிவு என்று வலியுறுத்தினர்.

தங்கள் முடிவு அதுவாக இருந்தால், நான் நிதி மந்திரியாக இனியும் இருந்து வருவது முறையாக இராது; எப்போது என்மீது வந்த புகார்பற்றி பிரதம நீதிபதியைக் கொண்டு பரிசீலனை செய்தாக வேண்டும் என்று முடிவெடுத்தீர்களோ, அப்போதே தங்கள் நம்பிக்கையை நான் பரிபூரணமாகப் பெற்றில்லை என்பது விளக்கமாகிறது. ஆகவே நான் என் பதவியை ராஜினாமாச் செய்கிறேன் என்று தெரிவித்தார்.

லால்பகதூர், வருத்தம் தெரிவித்தார்; ஆனல் தமது முடிவை மாற்றிக்கொள்ள மறுத்தார். டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமது ராஜிநாமாவை வலியுறுத்தினர்; லால்பகதூர் அதனை ஏற்றுக்கொண்டார்—வருத்தத்துடன்!!

இது நடைபெற்ற நிகழ்ச்சி—நாட்டை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது.

புகார் பற்றியோ, அது குறித்து எழுந்த விவாதம் பற்றியோ, காமராஜரைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்றுகூட லால்பகதூர் கருதவில்லை, பெரிய ரோஷக்காரர் என்ற விருதுபெற்ற காமராஜரும் தாம் இவ்விதம் புறக்கணிக்கப்பட்டிருப்பதுபற்றி ஒருவார்த்தை பேசவில்லை. எங்கோ கனவில், கயானவில் நடைபெறும் நிகழ்ச்சி என்று விட்டுவிட்டார்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பதவியை ராஜிநாமாச் செய்தார். புதிய நிதிமந்திரி நியமிக்கப்பட்டார்.

புகார் மனுவைக்கூட லால்பகதூர் தள்ளிவிடவில்லை.

இன்று வரையில்—நாளை எப்படியோ—காமராஜரேகூட டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது ஒரு அபத்தமான புகார் தொடுக்கப்பட்டது குறித்தோ, அதை ஒரு பெரிய பிரச்சினையாகக்கொண்டு ராஜிநாமாச் செய்யவேண்டிய நிலைக்கு அவரைத் துரத்திய நிலைமைகள்பற்றியோ ஒரு கண்டனம், ஒரு சொல் பேசவில்லை. அவருடைய அபாரமான ஆற்றல் அத்தனையும், தி. மு. கழகத்தின் ..திர்காலம் பற்றிய 'ஆரூடம்' கணிப்பதற்கே செலவிட்டுக் கொண்டிருக்கிருர்.

இப்படித் தன்னைக்கவனிப்பாரற்ற நிலையினராக்கிவிட்டதனை எண்ணி, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்,

அரசியல் துறவுபற்றியும்

சுய சரிதம் எழுதுவதுபற்றியும்

குறிப்பிட்டதுடன், டில்லியில் இருந்துகொண்டு அங்கு நடைபெற இருக்கும் 'வேடிக்கை'யைப் பார்க்கப்போவதாகக் கூறினர்.

என்ன வேடிக்கையோ, கூறவில்லை.

எதிர்பாராத முறையில் லால்பகதூர் மறைந்தார்.

இந்திராகாந்தியார் பிரதம மந்திரியாவதற்காக டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மும்முரமாகப் பணியாற்றினர்.

இந்திராகாந்தியார் தகுதியுள்ளவர் என்ற உணர்வு சலித்துப்போன உள்ளத்துடன் இருந்தவரையும் சுறுசுறுப்பாக்கிற்று என்று கூறினர்.

வேறு சிலரோ, தப்பித் தவறி **மொரார்ஜிதேசாய்** பிரதம மந்திரியாக வந்துவிட்டால், புகார் மனுபற்றிய புதுக் கட்டங்கள் அமைந்துவிடுமே என்ற திகில் உலவுகிறது என்றனர்.

இந்திராகாந்தியார் வெற்றிபெற்ருர்.

அவர்களாவது, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது—

பொருமை

பொச்சரிப்பு

பகை

போட்டி உணர்ச்சி

போன்றவை காரணமாகச் சிலர்

அபத்தமான

ஆதாரமற்ற

அலட்சியப்படுத்தத் த்க்க

புகார்களை அனுப்பியுள்ளனர். அதனை நான் பொருட்படுத்தவில்லை. அவர் மாசு அற்றவர் என்று தீர்ப்பளிக்கிறேன். அவருடைய பெருமையை நாடு உணரத் தக்க விதத்தில், அவர்மீது தொடுக்கப்பட்டுள்ள புகா

ரைக் குப்பையில் போட்டுவிட்டு மீண்டும் அவரை மந்திரிசபையில் அமர்ந்து பணியாற்றும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் என்று அறிவித்தாரா என்றால் இல்லை.

> அவர், தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதால், அவர் குறித்துஅனுப்பப் பட்ட புகார்பற்றி மேற்கொண்டு எந்தவித மான நடவடிக்கையும் மேற்கொள்ளத் தேவையில்லை என்று சர்க்கார் முடிவு செய் கிறது என்று மட்டுமே அறிவித்தார்.
>
> டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் குற்ற மற்றவர் என்று கூறிவிடவில்லை.
>
> டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய் யானவை என்று மெய்ப்பிக்கப்படவில்லை.

போதுமான அளவு தன்மான உணர்வு உள்ள எவரும் இந்த நிலையை வரவேற்கத்தக்கது என்று ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

> தகுந்த முறையில் புகார்பற்றி பரி சீலனை செய்து, என்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று மெய்ப்பிக்கப்படவேண்டும். அதுதான், சமூகத்தில் எனக்கு உண்மையான மதிப் பைக் கொடுக்கும். ஆகவே, புகார்பற்றிய விசாரணைக்கு ஏற்பாடு செய்யும்படி வற் புறுத்துகிறேன்

என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வற்புறுத்தி இருக்கவேண்டும், செய்யவில்லை! ஏன் என்றும் கூற வில்லை!

தம்மீது பூசப்பட்ட அழுக்கைத் துடைத்துக் கொள்ள முனையாமல், அவர் கிளம்பிவிட்டிருக்கிறார், எதிர்க்கட்சிகளை—குறிப்பாக, கழகத்தை—வெளுத்து வாங்க!

அவர் தரிசனம் கிடைத்ததும், பார்வையாளர் களின் கண்களிலே ஒருவிதமான குறும்புப்பார்வை! இதழ்களிலே ஒரு கேலிப்புன்னகை!

மெல்லிய குரலில் பேசிக்கொள்கிறார்கள்;

> இவர் கதியைப் பாருங்கள்!
>
> இருந்ததை இழந்துவிட்டு அலைகிறார்.
>
> இந்திரா காந்தியார்கூட இவருக்குப் பதவி தரவில்லை.
>
> இவருக்காகக் காமராஜர் ஒரு வார்த்தை பரிந்து பேசவில்லை.
>
> பதவிகூட வேண்டாம், புகார் அபத்த மானது என்று ஒருவார்த்தை சொல்லி இவர் மீது பூசப்பட்ட அழுக்கையாவது துடைத் திருக்கலாமல்லவா! அதையும் செய்யவில்லை.
>
> இவர் கழகத்தின் அழுக்குபற்றிப் பேசு கிறார்.
>
> நமக்கோ இவரைப்பார்த்ததும், இவர் மீது இப்போது பூசப்பட்ட அழுக்கும், முன்பு கிளம்பிய **முந்திரா** ஊழல் கிளப்பி விட்ட முடைநாற்றமும், அப்போது ஒரு தடவை இவர் பதவியைவிட்டு வெளியேறிய சம்பவமும்தான் நினைவிற்கு வருகிறது.

என்று இவ்விதமாகத்தான் பேசிக்கொள்கிறார்கள்,

இந்த மனநிலையுடன் உள்ளவர்களின் மத்தியில் பேசுகிறார்; பலன் எத்தனை உருப்படியாக இருக்க முடி யும் என்று விளக்கவா வேண்டும்.

ஆனால் பேசுகிறார்! அபாரமான நம்பிக்கையுடன்!!

எந்த நம்பிக்கை? மற்றவர் விஷயம் இருக்கட்டும் மகானுபாவரே! தங்கள் விஷயம் என்ன? ஏன் தங்கள் மீது துளியும் குற்றம் இல்லை; தொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதாரமே இல்லை என்று ஒரு விசாரணைக் குழு மூலம் விளக்கக் கூடாது. அப்படிச் செய்து விட்டுப் பிறகு ஒழுக்கப் பிரசாரம் செய்தால் நன்றாக இருக்குமே என்று யாரும் கேட்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை!

அதைப் பார்த்த பிறகுதான், தம்பி! எனக்கு, காச நோய்ச் சீமானும் அவன் கடிமணம் செய்து கொண்ட காரிகையும், ஆளைச்சாகடித்த டாக்டரும், ஊருக்கு, முறையே இல்லற இன்பம்—பதிபக்தி—ஆபத்தின்றி மோட்டார் ஓட்டுவது போன்றவை பற்றிய ‘உபதேசம்’ செய்ய முற்படுவது என்றால் மக் கள் என்ன கருதுவார்கள் என்று சிந்திக்கத் தோன் றிற்று.

என்ன கருதுவார்கள்? என்ன கருதுகிறார்கள்; டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சைக் கேட்டு விட்டு!

அவர் என்னமோ ஓயாமல் உச்சரிக்கிறார்!

> கழகத்தை நம்பாதே!
>
> கழகத்தை நம்பாதே!!

என்று. ஊரூருக்கும் சென்று அவர் அந்தத் திருமந்தி ரத்தைத்தான் உச்சரித்தபடி இருக்கிறார். ஆனால் மக்கள் செவியில் விழுவதோ

> முந்திரா விவகாரம்
>
> முந்திரா விவகாரம்

என்ற சொற்களே!!


காசநோய் கனகசபை இல்லற இன்பம் பற்றிப் பேசும்போது மக்கள் செவியில் என்ன விழும்,

மூன்றாந் தாரம்! இளமங்கை என்ற சொற்கள்!

மேலிடம் சென்றவர்கள்—பணம் காரணமாகவோ பதவி காரணமாகவோ மேலிடம் சென்றவர்கள், தீமை புரிந்துவிட்டு, உபதேசிகளாக வடிவமெடுக்கும்போது, எதிர்த்துக் கேட்டிடமாட்டார்கள்; உன் வாயாலா இவை பற்றிப் பேசுகிறாய் என்று கூறமாட்டார்கள்; அவர்களின் கண்களிலே ஒரு குறும்புப் பார்வை மல ரும்; இதழோரத்தில் ஒரு கேலிப் புன்னகை தெரியும்.

எனக்கு ஓவியம் தீட்டத் தெரியாது, தம்பி! தெரிந்திடின் எனக்குக் கொள்ளை ஆசை; அந்தக் குறும்புப் பார்வையையும், கேலிப் புன்னகையையும் படமாக்கித் தந்திடவேண்டும் என்று. இயலவில்லை. உன் மனக்கண்ணால் அந்தக் காட்சியைக் கண்டு கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். கருத்தோவியம் கிடைத்திடும்.

அண்ணன்,



2 ம் பக்கத் தொடர்ச்சி

அழிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன்! அப்படி நான் நினைத்திருந்த நேரத்தில், குலசேகரன் திடீரென்று மதுரைமீது படையெடுத்தான் -மண்ணாசை பிடித்து! மதுரை மன்னன் பராக்கிரமபாண்டியன் ஒரு பௌத்தன். பௌத்த மதத்தைப் பரப்புவதில் அதிக அக்கறை காட்டுபவன், குலசேகரனோ-பௌத்தத்திற்கு விரோதி அல்ல என்றபோதிலும், எந்த மதத்தையுமே நம்பாதவன்! பௌத்தத்தை வளர்க்க அவன் ஆதரவு காட்டவில்லை—ஆனால் அதன் வளர்ச்சியைத் தடுக்கவும் அவன் குறுக்கே விழுந்ததில்லை! மாசில்லாத பௌத்தன் ஒருவன்—மண்ணாசை பிடித்த பௌத்த விரோதியல்லாத ஒருவன்! இருவருக்கு மிடையே போர்! யார் வெற்றியடைந்தால் பௌத்தம் வளரும்? இருவரிலே எவரை நாம் ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள்? இவற்றைச் சிந்தித்துப் பார்த்தே, நான் மதுரை மன்னனுக்கு உதவிப் படை அனுப்பினேன்! சுயநலத்தால் குலசேகரன் சோழனின் தாள் பணிந்து சைவனாகிவிட்டான்! இன்று பாண்டிய நாட்டின் அரச மதமாக சைவம் கொலுவீற்றிருக்கிறது! சைவத்தை அவன் தழுவியதில்கூட, நமக்குக் கவலை அதிகமில்லை! அவன் ஆட்சியில் பௌத்தர்கள் கொடுமை செய்யப்படுகிறார்கள்! எனவேதான் மதுரைமீது படையெடுத்து, அந்த மமதையாளனை மண் கவ்வச் செய்யவேண்டும் என்பது!" என்று பராக்கிரமபாகு பேசி முடித்ததும், 'ஆமாம், அதுவே சரி! அறியாமைக்குப் பால் வார்த்து வளர்க்கும் அந்தக் குலசேகரனை அழித்தே தீரவேண்டும்!' என்று அங்குக் குழுமியிருந்தோர் முழக்கமிட்டனர்.

"குலசேகரனை முடியிழக்கச் செய்யும் முயற்சிக்கு என் முழு ஆதரவும் உண்டு?" என்று கொங்கு நாட்டிலிருந்து வந்திருந்த **சுவடியடிகள்** சொல்லிக்கொண்டே, தம் அருகே கொடுவாள் மீசையோடும், தலையில் வட்டமான தலைப்பாகையும் உடலில் பச்சைநிறப் போர்வையோடும் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்தார்.

"ஆமாம், அவனை அழித்தால்—ஒழிந்து போகும் வைதீக மதம்—ஓங்கி வளரும் பௌத்தம்!' என்று அந்தக் கொடுவாள் மீசைக்காரன் கூறினான்.

"இவர் யார் என்று எண்ணுகிறீர்களா? சொன்னால் நீங்கள் ஆச்சரியமடைவீர்கள்!" என்று தன்னைச் சுட்டிக் காட்டிச் சுவடியடிகள் சொல்லியதைக் கேட்டதும், அந்தக் கொடுவாள் மீசைக்காரனின் மனம் பகீர் என்றது.

"இவரை நம்பி வந்தோமே! இப்பொழுது காட்டிக் கொடுத்துவிடுவார் போலிருக்கிறதே!" என்ற அச்சத்தோடு, அவன் போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்துக் கொண்டான்.

"இவர் பெயர் பூஞ்சோலை! இவருக்குக் குடும்பம் உண்டு! குழந்தைகளும் உண்டு! தூய்மையான பௌத்தர்! உலகெலாம் பௌத்த நெறி பரவவேண்டுமென்பதில், அடங்காத ஆர்வங் கொண்டவர்! இவற்றை மட்டும் சொல்லி நான் நிறுத்திக்கொண்டால், இங்கு வந்திருக்கும் பௌத்த இல்லறத்தாரில் இவரும் ஒருவர் என்று நினைத்துக்கொள்வீர்கள்! இவர் பாண்டிய மன்னன் குலசேகரனின் நண்பர்! ஆச்சரியமடையாதீர்கள்— இப்பொழுது அல்ல! குலசேகரன் சுயநலக்காரனாக மாறுவதற்கு முன்னர்—திருநீறு அவன் நெற்றியில் ஏறுவதற்கு முன்னர்—நண்பர்! என்று சுவடியடிகள் சொல்லியதைக் கேட்டதும், இலங்கை அரசன் பூஞ்சோலையைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"இவர் இல்லறத்தில்ஈடுபடாமலிருந்தால், இந்தச் சிறு வயதிலேயே பௌத்தத் துறவிகளில் தலைமையானவராக — தேரராக — விளங்க வேண்டியவர்!......' என்ற சுவடியடிகளின் பேச்சை இடைமறித்து, 'தாயையும் மனைவியையும் ஆதரித்தல், மனைவியையும் குழந்தையையும் போற்றுதல், அமைதியானதொரு வாழ்க்கை நடத்துதல்—இதுதான் மாபெரும் நற்பாக்கியம் என்று புத்தபிரான் திருவாய் மலர்ந்திருக்கிறார்! அந்த மாபெரும் நற்பாக்கியம் இவருக்குக் குறையாச் செல்வமாக வளரட்டும்!' என்று பராக்கிரமபாகு ஆசி கூறினான்.

'இல்லறத்தைவிட்டு தற்போது துறவத்தில் குதிக்க நான் விரும்பவில்லை! நானிருக்கும் திருநெல்வேலியிலிருந்தபடியே என்னால் இயன்ற அளவு பௌத்தத்திற்கும் சேவை செய்வேன்! இது உறுதி! ததாகதர் தம்மைப்போலவே எல்லோரையும், அரண்மனையையும்ஆசைமனைவியையும் அன்பு மகனையும் விட்டுவிட்டு வந்துவிடும்படி உபதேசிக்கவில்லை! மகனின் கடமை, தந்தையின் கடமை கணவனின் கடமை—இப்படிப் பலரின் கடமைகளைக் குறித்து அவர் பொன்மொழிகள் சிந்தியிருக்கிறார்! பொதுவாக எல்லோருக்கும் ஒரே கடமை, எல்லோருக்கும் ஒரே மஞ்சள் ஆடை என்று அவர் எங்கும் கூறியது கிடையாது! பிக்குகளாலும் பிக்குணிகளாலும் பௌத்தம் வளருவதைப் போலவே, என்னைப்போன்ற இல்லறத்தார்களாலும் அது வளருகிறது!' என்று பூஞ்சோலை பேசிக்கொண்டுவந்தபோது, உண்மை உண்மை!' என்று இலங்கை அரசன் இடையே கூறினான். மன்னன் சொல்வதைப் புன்னகையோடு ஆமோதித்தபடி, பூஞ்சோலைபேசிக்கொண்டே இருந்தான்.

'அரசே! பௌத்தம் பரவ தாங்கள் எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்காக பௌத்தர்களின் சார்பில், என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்!

இன்பங்களை அள்ளிப் பருகத் தங்களுக்கு வாய்ப்பும் வசதியும் இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு, கடல் கடந்து வந்திருக்கிறீர், இங்கே! எதற்காக? புத்த மதத்தைப் பரவச்செய்வதற்காக, அந்த நல்லநெறி பரவாமல் குள்ளநெறிச் செயல் புரிவோரை அடக்க, அழிக்க, வந்திருக்கிறீர்! எங்களது பூரண ஆதரவு, தங்களுக்குஉண்டு! சுயநல நோக்கோடு பௌத்தத்தின் வைரியாக மாறிய, அந்தக் குலசேகரனைக் களத்தில் சந்திக்கப்போகிறீர்! மனம் களிப்புக்கொள்கிறது அரசே, அந்த மங்கலநாள் நெருங்கிவிட்டதை எண்ண! குலசேகரன் கொல்லப்படவேண்டும்! அவன் பிணம் கல்லறைக்குச் செல்ல வேண்டும்! அந்தக் கல்லறைமீது புத்த விகாரம் எழவேண்டும்!" என்று கொடுவாள் மீசைக்காரனான பூஞ்சோலை பேசியதைக் கேட்டதும், அனைவரும் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர்.

"இவ்வளவு ஆதரவு கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லையே! இந்தப் பூஞ்சோலை ஒருவனே போதுமே, நமக்கு வேண்டிய ஆதரவை இந்த நாட்டில் சேகரித்துத் தர! அடே குலசேகரா, உன் தலை வெட்டப்படுவது நிச்சயம்! அதை எடுத்துச்சென்று என் கோட்டைச் சுவரின்மீது வைப்பது நிச்சயம்! என்று பராக்கிரமபாகுவின் மனதில் ஒரு குரல் கொக்கரித்தது.

நன்ருக நடித்தோம் என்ற பூரிப்போடு பூஞ்சோலை, அனைவரையும் ஒருமுறை சுற்றிப்பார்த்தான். எல்லோரும் கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருந்த போது, ஒரு வயதான பிக்குவும் அவர் பக்கத்தில் காஷாயமணிந்த ஒரு பெண்ணும் மட்டும் சோகத்தோடு மௌனமாக இருப்பதைக் கண்டான்.

அந்தப் பெண் தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கண்டதும், பூஞ்சோலையின் மனம் திடுக்கிட்டது.

"இவள் யார்? ஏன் இப்படி என்னைப் பார்க்கிருள்? ஒருவேளை என்னை யார் என்று தெரிந்துகொண்டாளோ?" என்ற சந்தேகத்தால் அவன் மனம் குழம்பியது.

"இந்த உலகம் எப்பொழுதும் எரிந்துகொண்டே இருக்கையில் இங்கே என்ன சிரிப்பு? இங்கே என்ன களியாட்டம்? இருளால் மூடப்பட்டிருக்கும் நீங்கள், ஏன் ஒளியைத் தேடுவதில்லை?" என்ற புத்த பிரானின் அமுதவாக்கைச் சொல்லியபடி, அந்தப் பெண்ணுக்குப் பக்கத்திலிருந்த வயோதிக பிக்கு மெள்ளத் தள்ளாடி எழுந்து நின்ருர்.

எல்லோரது பார்வையும் அவர்பக்கம் திரும்பியது.

"கூரை செம்மையாக வேயப்படாத வீட்டினுள் மழைநீர் பாய்வதைப்போல, நன்னெறிப் பயிற்சியில்லாத மனத்தினுள் ஆசைகள் புகுந்துவிடுகின்றன—என்ற புத்த ஞாயிறுவின் மணிமொழியை, உங்களது நினைவிற்குக் கொண்டுவருகிறேன்!" என்ருர், அந்தப்பௌத்தத் துறவி, அமைதியானமுறையில்.

"அறிவொளி அடிகளே! தங்கள் கருத்தை அறிய நாங்கள் ஆவலோடு இருக்கிருேம்! விளக்கமாகக் கூறுங்கள்!" என்று இலங்கை அரசன் அந்தத்துறவியைப் பார்த்துப் பயபக்தியோடு கூறினுன்.

"பௌத்தம் பரவவேண்டும்! உலகிலுள்ள மக்களெல்லாம் புத்த மார்க்கத்தில் சேரவேண்டும்! மற்ற மதங்கள், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகவேண்டும்; பௌத்தமே ஏகமதமாக எங்கும் பரவியிருக்கவேண்டும்! பாதையிலிருக்கும் கல்லையும் முள்ளையும் எடுதது எறியவேண்டும் என்பதைப்போல, நம் இலட்சியத்திற்கு இடையூருக இருப்பவர்களை எல்லாம் தாக்கித் தகர்க்கவேண்டும்! இவ்வளவு நேரமாக இங்கே பேசப்பட்டதின் சுருக்கம் இதுதானே?" என்ற கேள்வியோடு அறிவொளி அடிகள், பராக்கிரமபாகுவின் முகத்தைத் திரும்பிப் பார்த்தார்.

"ஆமாம்!" என்பதைப்போல, அந்த மன்னன் தலையை அசைத்தான்.

"இராசராச சோழனுக்கும் தங்களுக்கும் என்ன வித்தியாசம்? சைவம் பரவவேண்டும் என்றஆசை அவனுக்குப் பௌத்தம் பரவவேண்டும் என்ற ஆசை தங்களுக்கு! அந்த ஆசையினுல் எதைச்செய்யவும் அவன் தயாராக இருக்கிருன். இவனைக் கொன்ருல்தான் சைவம் வளரும், இந்த நாட்டைப் பிடித்தால்தான் சைவம் பரவும், இந்த ஊரையே தீவைத்து சாம்பலாக்கினுல்தான் சிவனுரின் சித்தம் குளிரும் என்று சொன்னுல் போதும் — அவன் ஆலோசனை செய்தே பார்க்கமாட்டான்—அதே நொடியில் அவ்வளவையும் முடித்தே தீருவான்! சைவம் என்ருல், அவ்வளவு வெறி அவனுக்கு! அதற்காக எந்தப் பாவத்திற்கும் பழிக்கும் அஞ்சமாட்டான் அவன்! தாங்களும் பௌத்தம் பரவவேண்டும் என்ற ஆசையினுல், எந்தப் பழிபாவத்திற்கும்தயாராகிறீர்கள்; வயல்களுக்குத் தீமை களைகள், மனிதவர்க்கத்திற்குத் தீமை ஆசைகள் என்றும், ஆசையினுல் உந்தப்பட்ட மனிதர்கள் வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப்போல, அங்குமிங்கும் ஓடித் திரிகிருர்கள் என்றும், புத்தர் கூறியிருக்கிருர். ஆசையை அடக்கவேண்டும் என்று கூறிக்கொண்டே, பௌத்தம் பரவவேண்டும் என்ற ஆசைக்கு மட்டும் பலியாகலாமா? அந்த ஆசையினுல் உந்தப்பட்டு, உயிர்களை அழிக்கத் துணியலாமா? மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை ஆகிய ஆசைகளுக்கு வேறுபட்டதுதான் பௌத்தம் பரவவேண்டும் என்ற ஆசையும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்! நல்லது செய்யவேண்டுமென்ற ஆசை ஒவ்வொருவர் உள்ளத்திலும் பொங்கவேண்டும்! அந்த ஆசை கூடாது, அதை அடக்க வேண்டுமென்று, அறத்தகை முதல்வன் அறைந்ததில்லை! ஆனுல் அந்த ஆசை, வெறியாக மாறி, அந்த வெறியினுல் உயிர்வதை உண்டாகிறது என்ருல், அத்தகைய நேரத்தில், அந்த ஆசையையும் எதிர்க்கத்தானே வேண்டியிருக்கிறது? குலசேகரன் பௌத்தத்தின் எதிரியாகிவிட்டான்! ஆகவே அவன்மீது படையெடுத்துச் சென்று, அவன் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்கிறீர்கள்! பௌத்தத்திற்குக் கேடு செய்தால் — அப்படிக் கேடு செய்தவனைப் போர்க்களத்தில் கொன்று—அவன் கல்லறை மீது புத்தவிகாரத்தை எழுப்ப வேண்டுமென்று இப்பொழுது பேசப்பட்டது! அதைக் கேட்டபோது வெட்கமும் வேதனையும் என் உடலைக் குன்றச்செய்துவிட்டன! முடிவாக ஒன்றை, நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்! உயிர்களைக் கொன்று, இரத்த ஆறு ஓடச்செய்தால்தான்—மற்ற மதங்களைப்போல— பௌத்தமும் — வளரும் என்ருல், அத்தகைய பௌத்தம் நமக்கு வேண்டாம்! பாண்டிய நாட்டில் சித்திரவதைக்குள்ளாகும், பௌத்தர்கள், பௌத்தத் துறவிகள் சார்பில் நான் பேசுகிறேன்! கரைமீது விழுந்த மீனைப்போல குலசேகரன் ஆட்சி அவதிக்குள்ளாகித் துடிப்பவர்கள் நாங்கள்தாம்! இன்னலுக்குமேல் இன்னலாக எங்களைக் கொட்டிக்கொண்டு இருக்கின்றன! வள்ளுவனையும் புத்தனையும் நினைத்து, அவ்வளவு நஞ்சையும் தேனுக மாற்றிக்கொள்கிருேம்! குலசேகரன் எங்களை வாட்டி வதைக்கிருன்! ஆயினும் அவன் மீது நீங்கள் படையெடுத்தால்— புத்தநெறிக்கும் குறள் நெறிக்கும் களங்கம் வரக்கூடாது என்ற ஒரே காரணத்தால்-அவனைத்தான் நாங்கள் ஆதரிப்போம்! இது நிச்சயம்!"

இவ்வாறு அறிவொளி அடிகள் பேசியதைக் கேட்டதும், கொடுவாள் மீசைக்காரனுன பூஞ்சோலையின் கண்கள் கலங்கின.

துக்கத்தைத் தாளமுடியாமல் அவன் மெள்ள எழுந்து புத்தவிகாரத்திற்கு வெளியே வந்தான்.

'அறிவொளி அடிகள் போன்ற தூயமணிகள் பிறந்த நாட்டில், பிறந்தவனு நான்?'

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவன் நடந்தான்.

ஊரைத் தாண்டி, செடிகொடி நிறைந்த பாதையின் வழியே அவன் சென்றபோது, 'பூஞ்சோலை! பூஞ்சோலை!' என்று யாரோ தன்னை அழைப்பதைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தான்.

அறிவொளி அடிகளின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்தப்பெண் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தாள்!

[வளரும்]

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணுதுரை.